செ.வெ. எண்: 92 நாள் : 28–01–2011

# சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பிறந்த நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்!

## முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

மீனவர் சமுதாய மேதை சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் அவர்களின் நினைவாக, சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு “சிங்காரவேலர் மாளிகை'' எனப் பெயர் சூட்டியும், அங்கு அவரது திருவுருவச் சிலையை நிறுவியும், மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டத்திற்கு “சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் நினைவு இலவச மீனவர் வீட்டு வசதித் திட்டம்'' எனப் பெயர் சூட்டியும், அவரது நூல்களை நாட்டுடைமையாக்கி, மரபுரிமையர்க்கு 15 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகையாக வழங்கியும், பல்வேறு வகையில் சிறப்புகள் செய்துள்ள இந்த அரசு; சிங்காரவேலரின் 151–வது பிறந்த நாளான பிப்ரவரி மாதம் 18 ஆம் நாளை அரசு சார்பில் கொண்டாடுவதென்று முடிவெடுத்துள்ளதாக முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார்.

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.

* * * * *